# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2018–ம் வருடம் ஏப்ரல் மாதம் 4–ம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1) தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82–ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A -ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம் ) சட்டம் –2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920

5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section (1)

(1) for clause©, the following clause shall be substituted, namely:-

"© buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax".

(2)in the proviso, for the Expression "clauses (a), (c) and (e)", the expression clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். எனவே :–

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.

2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ,1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.

3) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

4) கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.

5) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

6) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)–ன் படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 509/2018/எ1)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1237</u>
அனுமதி வழங்கப்பட்டது.

2) இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களை கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு 27–03–2018–ம் தேதி மூன்றாவது முறையாக கோரப்பட்ட ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு.

இனம்–1

தக்கலை பேட்டை தினசரி சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் தலை சுமை சாமான்கள் வண்டிகள் லாறிகள் முதலியவைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு வேண்டி மூன்றாவது முறையாக 27–03–2018–ம் தேதி நடைபெற்ற மறு ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு வேண்டி திரு. மகேஸ்வரன் என்பவர் மட்டும் ஏல வைப்புத் தொகை ரூ.10,00,000/– கூடுதல் பொறுப்பு தொகை

ரூ.15,00,000/–மற்றும் இதர வைப்புத் தொகை ரூ.1,00,000/–க்கான வங்கி வரைவோலை வழங்கினார். ஆனால் அன்னார் அன்று நடைபெற்ற மறு ஏலத்திலும் கலந்து கொள்ளவில்லை. மறு ஒப்பந்தப்புள்ளியும் அளிக்கவில்லை.

இனம்–2

தக்கலை பேட்டை தினசரி சந்தையின் அருகில் உள்ள மீன் கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு வேண்டிய மூன்றாவது முறையாக நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் திரு.டி.ஜான்றோஸ் என்பவர் மட்டும் வைப்புத் தொகை செலுத்தி 3–வது முறையாக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அன்னார் ரூ.1,55,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார்.

இனம்–3

குமாரகோவில் பகுதியில் கட்டப்பட்டுள்ள கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு வேண்டி 3–வது முறையாக நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் எவரும் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொள்ளவில்லை.

இனம் எண். 1 மற்றும் 3–க்கு எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படாத காரணத்தால் குறுகியகால மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேலும் இனம் 2–க்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த ஆண்டை விடவும் கடந்த மூன்றாண்டுகளின் சராசரி தொகையை விடவும் குறைவாக உள்ளதால் குறுகிய கால மறுஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேலும் மூன்று இனங்களுக்கும் 31–03–2018–ம் தேதிக்குள் குறுகியகால மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி நடத்த போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் மேற்படி மூன்று இனங்களையும் ஒப்படைக்கும் நாள் வரை துறை மூலம் (Department Collection) வசூல் பணி மேற்கொள்ளலாம்.

எனவே 01–04–2018 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ள ஏதுவாக அவசர அவசியம் கருதி இரசீது புத்தகங்கள் உடன் அச்சடிக்க கூட்டுறவு அச்சக நிறுவனங்களில் இருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெற்று அச்சடிக்க நடவடிக்கைகள் எடுத்ததையும் அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1981/2017/அ1)

<u>**நகர் மன்ற தீர்மானம் எண். 1238**</u>

அனுமதி வழங்கப்பட்டது.

3) ஒகிபுயல் நிவாரண நிதி உதவித் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள், சேதமடைந்ததை பழுது நீக்கம் மேற்கொள்வதற்கு மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட

தொகையில் இருந்து ரூ.2.00 லட்சம் மட்டும் இந்நகராட்சிக்கு வரப்பட்டது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29074/2017/இ2, நாள் 13–03–2018–ல் ஒகி புயல் நிவாரண பணிகளுக்காக SDRF (State Disaster Response Fund) மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.21.00 இலட்சம் இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து கீழ்கண்ட பணிகளை எடுத்துச் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாலைகள் தற்காலிகமாக சீரமைக்கும் பணிக்கு. | – | ரூ.90000/– |
| | | | ரூ.190000/– |
| | | | ரூ.280000 |
| 2. | தெருவிளக்கு சீரமைக்கும் பணிக்கு | | ரூ.1000000 |

மேற்கண்ட விபரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்க்கண்ட விவரப்படி வேலைகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | தொகை<br>ரூ.<br>(மதிப்பீடு இலட்சத்தில்) |
|---|---|---|
| | **A. சாலை சீரமைப்புப் பணிகள்** | |
| 1. | மேலாங்கோடு சாலை சீரமைக்கும் பணி. | 0.90 |
| 2. | குமாரகோவில் சாலை, பெருமாள் கோவில் சாலை , அரண்மனை முகப்பு (செட்டியார் தெரு) சந்தைவெளி சாலை மற்றும் இதர பகுதிகளில் உள்ள சாலைகள் சீரமைக்கும் பணிகள். | 1.90 |
| | **B. தெருவிளக்கு பராமரிப்பு பணிகள்** | |
| 1. | EB Metering, Panel with Digital Timer Switch box (30 Nos) | 4.25 |
| 2. | 30 W LED Street light fitting (54 Nos) | 1.75 |
| 3. | LED focus light for Highmast light | 3.00 |
| 4. | Street light Assories such as 1/18 wire, 3/20 wire, sine holders, Top roll, ELD bulb (20W)etc., | 1.00 |
| | Total | 10.00 |

மேற்கண்ட பணிகளை அதனதன் எதிரில் குறிப்பிட்ட மதிப்பீட்டு பிரகாரம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்காணும் பணிகளைச் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 538/2018/இ1)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1239</u>

அனுமதி வழங்கப்பட்டது.

4) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வெட்டிகோணம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 16–11–2017 அன்று வரவழைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|
| | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம் ) |
| 1.திரு.என். ஜாண்ஜஸ்டஸ் | – | (+) 4.10 |
| 2.திரு. சி. ஸ்டீபன் | (–)0.11 | – |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக (மதிப்பீட்டினை விட 0.11% குறைவாக)ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி.ஸ்டீபன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1902/2017/இ1)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1240</u>

அனுமதி வழங்கப்பட்டது.

5)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் நகரபுல எண். எ4–2, 3 திரு. சவரியாயி என்பவர் பத்மனாபபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் மேல்முறையீடு Appeal No. CMA 7/2017–ன் படி நகராட்சி ஆணையரை கூடுதல் பிரதிவாதியாக ஆஜராக தெரிவிக்கப்பட்டது. அதற்காக நகராட்சி வழக்கறிஞர் வழக்கு சம்மந்தமாக நீதி மன்றத்தில் ஆஜராகி வக்காலத்து எதிர்வாதுரை தயாரிக்கப்பட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வகையில் திரு. டென்னிசன், வழக்கறிஞருக்கு வழக்கு தொகை ரூ.10,700/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1472/2017/ற்றி.பி.ஐ)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1241</u>

அனுமதி வழங்கப்பட்டது.

6)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் நகரபுல எண். எ4–2,3–ல் திரு.சுப்பையன் என்பவர் பத்மனாபபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் மேல்முறையீடு Appeal No. CMA 6/2017-ன் படி நகராட்சி ஆணையரை கூடுதல் பிரதிவாதியாக ஆஜராக தெரிவிக்கப்பட்டது. அதற்காக நகராட்சி வழக்கறிஞர் வழக்கு சம்மந்தமாக நீதி மன்றத்தில் ஆஜராகி வக்காலத்து எதிர்வாதுரை தயாரிக்கப்பட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வகைக்கு திரு. டென்னிசன், வழக்கறிஞருக்கு வழக்கு தொகை ரூ.10,700/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1471/2017/ற்றி.பி.ஐ)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1242</u>

அனுமதி வழங்கப்பட்டது.

7) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் பத்மனாபபுரம் நகராட்சி முழுமைத் திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 28–ன் கீழ் அரசாணை எண். 33 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 19–01–1994–ன் படி பத்மனாபபுரம் நகராட்சி முழுமைத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதில் வார்டு–4, பிளாக்–2 நகர அளவை எண். 19/2–ல் பகுதி நகராட்சி முழுமைத் திட்டத்தில் விவசாய நிலப்பகுதியில் உள்ளது. தற்போது உள்ள அரசாணை எண்.147 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04–06–2004–ன் படி இணக்கம் பெறப்பட்ட பத்மனாபபுரம் நகராட்சி முழுமைத் திட்டம் இந்த இடம் தொழிற்சாலையாக (Industrial controlled) உபயோகத்தில் உள்ளது. எனவே நகர புல எண். டி2–19/2–ல் உள்ள பகுதியை கல்வி உபயோக (Education Zone) பகுதியாக மாற்றம் செய்ய பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை பெறுவதற்கு அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 30 தினங்களுக்குள் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க கோரி தினமலர் நாளிதழிலும் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழிலும் 03–03–2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை இது குறித்து பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படவில்லை . எனவே நகர புல எண். டி2–19/2–ல் உள்ள பகுதியை தொழிற்சாலை உபயோகத்தில் இருந்து கல்வி உபயோக பகுதியாக மாற்றம் செய்ய அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். ற்றி.பி.ஐ/1501/2017)

<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1243</u>

அனுமதி வழங்கப்பட்டது.

8)2018–2019 நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின்பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 236 /2018/பி1)

**நகர் மன்ற தீர்மானம் எண். 1244**

அனுமதிக்கப்பட்டது.

9)ஒகி புயலால் பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே சேதமடைந்த கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை வழியாக இந்நகராட்சிக்கு ரூ.8.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்காணும் பணிகளை அதன்தன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையின்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டதை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) | செலவீனம் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | Renovation works to 3.00 lakhs litre capacity O.H.T. @ Govt., Hospital. | 0.75 | 0.74 |
| 2. | Renovation works to 2.00 lakhs litre capacity OHT @ Palace and Puliyoorkurichi | 1.00 | 0.93 |
| 3. | Renovation works to 2.00 lakhs litre capacity OHT @ Market. | 0.85 | 0.65 |
| 4. | Issue of fuels to the genset at Head works | 0.50 | 0.48 |
| 5. | Maintenance of compound wall at Town Hall Repairly building in Padmanabhapuram Municipality | 2.60 | 2.57 |
| 6. | Reconstruction of culvert at Udayakirikottai and Santhaivazhi road. | 0.85 | 0.66 |
| 7. | Hire Charges paid for the other Municipal staffs stayed at Kalyanamandapam (Mariage Hall) | 0.25 | 0.22 |

| | | | |
|---|---|---|---|
| 8. | Repairing of Damages occurred in public Health Vechile No.TN 75P9346 | 0.70 | 0.69 |
| | Total | 7.50 | 6.94 |

மேற்காணும் செலவினம் போக மீதமுள்ள தொகைக்கு கீழ்க்காணும் பணிகளை அதனதன் எதிரில் குறிப்பிட்ட மதிப்பீட்டு பிரகாரம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பழுது பார்க்கும் பணி. | 1,70,000/– |
| 2. | பத்மனாபபுரம் பூங்காவில் உள்ள அங்கன்வாடி மையம் சுற்றுச் சுவர் பழுது வேலை மற்றும் மின்சார வயர் புதியது மாட்டுதல். | 20,000/– |
| 3. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் மற்றும் குடிநீர் தொட்டியினை சீரமைத்து அவைகளை சுற்றி பேவர் பிளாக் அமைத்தல் | 80,000/– |
| | **மொத்தம்** | **2,70,000/–** |

(ந.க.எண். 538/2018/இ1)

**<u>நகர் மன்ற தீர்மானம் எண். 1245</u>**

அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/–(தே. கிருஷ்ணமூர்த்தி)
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.